**வரையறுத்த ஹிங்குரானை சீனித் தொழிற்சாலை - 2016/2017**

---

வரையறுத்த ஹிங்குரானை சீனித் தொழிற்சாலையின் 2016 மற்றும் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுகளுக்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. தொழிற்சாலையினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் கருதும் தொழிற்சாலையின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளை நிர்ணயித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

---

**2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

---

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களும் வரைபு வருடாந்த அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் தொழிற்சாலையின் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்களும் வரைபு வருடாந்த அறிக்கையும் இந்த அறிக்கைத் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்**

---

1993 ஆம் ஆண்டில் தனியார் மயப்படுத்தலிற்கு உட்பட்ட இந்நிறுவனம் வெற்றியளிக்காமையின் காரணமாக 1997 ஆம் ஆண்டின் போது மீண்டும் அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும், 1998 ஆம் ஆண்டிலிருந்து எதுவித உற்பத்தி நடவடிக்கையும் இடம்பெற்றிருக்காததனால் 2001 ஆம் ஆண்டின் போது இழப்பீடு செலுத்தப்பட்டு அனைத்து ஊழியர்களினதும் சேவை முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் தொழிற்சாலைக்குச் சொந்தமான காணிகளில் ஒரு பகுதியும் கட்டிடங்களும் 30 ஆண்டுகள் குத்தகையின் அடிப்படையில் வழங்கப்பட்டு கல்லோயா பெருந்தோட்ட தனியார் கம்பனி தோற்றுவிக்கப்பட்டிருந்தது. நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் நிர்வாக நடவடிக்கைகளுக்குமாக 2016 ஆம் ஆண்டின் போது 09 ஊழியர்கள சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் தற்பொழுது தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பொது முகாமையாளர் ஒருவர் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் நிறுவனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 1,445,210,731 மறைப் பெறுமதியான தேறிய சொத்துக்கள் நிலைமை காணப்பட்டது. அதற்கிணங்க நிறுவனத்தின் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் நிச்சயமற்ற நிலையில் காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

## 2.3 கணக்கேடுகளையும் பதிவேடுகளையும் பேணுதல்

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான கணக்கேடுகளும் பதிவேடுகளும் முழுமைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உள்ளமை

தொழிற்சாலையினால் கடைசியாகத் தயாரிக்கப்பட்ட 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள், செலவுகள் என்பன தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| | **பெறுமதி** |
|---|---|
| சொத்துக்கள் | ரூபா |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | 153,005,563 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 147,279,541 |
| மொத்தச் சொத்துக்கள் | 300,285,104 |
| பொறுப்புக்கள் | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 83,806,918 |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | 1,661,688,913 |
| | 1,745,495,831 |
| தேறிய சொத்துக்கள் / உரிமை | (1,445,210,731) |
| முழுப் பொறுப்புக்கள் மற்றும் உரிமையாண்மை | 300,285,100 |
| மொத்த வருமானம் | 11,702,140 |
| மொத்த செலவினம் | 10,193,734 |
| மிகை / (பற்றாக்குறை) | 1,508.406 |

## 2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

2017 ஆம் ஆண்டிற்கான கொடுப்பனவு வவுச்சர்கள் மற்றும் காசேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட செலவுகளையும் பெறுவனவுகளையும் பரீட்சிக்க முடியாதிருந்தது. மேலும் தொழிற்சாலைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட சொத்துக்கள் சம்பந்தமாக 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பௌதீக மெய்மையாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததனால் சொத்துக்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் முடியாதிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல்

1998 ஆம் ஆண்டிலிருந்து தொழிற்சாலையில் எதுவித உற்பத்தி நடவடிக்கைகளும் இடம்பெற்றிருக்காததன் காரணமாக நிறுவனத்தின் சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அச்சொத்துக்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலையில் காணப்பட்டன. மேலும், ஆண்டிற்கான செலவுகளாக சம்பளக் கொடுப்பனவு, ஊழியர் சேமலாப நிதியம், எரிபொருள் செலவுகள் முதலியவற்றிற்காக ரூபா 3,341,294 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அச்செலவினத்தைத் தீர்த்து வைப்பதற்காக வரிசை அமைச்சின் மூலம் ரூபா 2,887,610 கிடைத்திருந்தது.

## 3.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழிற்சாலைக்குச் சொந்தமான 277.73 ஹெக்டேயர் காணிகளும் அவற்றிற்குரிய தொழிற்சாலைக்கட்டிடங்களும் 30 ஆண்டுகள் காலத்திற்காக குத்தகை அடிப்படையில் வரையறுத்த கல்லோயா பெருந்தோட்ட தனியார் கம்பனிக்கு 2007 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. 2009 மார்ச் 06 ஆந் திகதிய 09/0398/329/003 ஆம் இலக்க 2009 மார்ச் 18 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ஒரு உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு அதற்காக சட்டமா அதிபரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தும் இவ்வறிக்கைத் திகதி வரை அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 20 ஆண்டுகளுக்கு முன்னர் 4493 விவசாயிகளுக்கு மத்தியில் 2.5 ஏக்கர் காணிகள் வீதம் 11232 ஏக்கர்கள் குத்தகை உடன்படிக்கையின் மூலம் வழங்கப்பட்டிருந்தும் அக்காணிகளின் குத்தகைப் பணங்கள் அறவீடு செய்யப்படாதிருந்ததுடன் குத்தகை உடன்படிக்கைகளின் காலமும் காலாவதியாகியிருந்தது. அதற்கிணங்க காணிகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது புதிதாக குத்தகை உடன்படிக்கைகளில் கையெழுத்திட்டு அவற்றினை ஒப்படைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தொழிற்சாலைக்குச் சொந்தமான 273 உத்தியோகபூர்வ இல்லங்களில் 91 உத்தியோகபூர்வ இல்லங்களில் அத்துமீறிக் குடியிருப்பாளர்கள் வசித்து வருவதுடன் அவர்களை வெளியேற்றுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் ஏனைய இல்லங்களிலிருந்து வாடகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நாரஹேன்பிட்ட அலுவலகத்தில் போத்தல்களை உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்களும் உபகரணங்களும் 3 மோட்டார் சைக்கிள்கள், ஒரு மோட்டார் கார், ஹிங்குரான தொழிற்சாலை வளவில் காணப்படுகின்ற இயந்திரங்களும் உபகரணங்களும் என்பவற்றை உள்ளடக்கிய சொத்துக்கள் 1997 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்றுக் காணப்பட்டதன் காரணமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாதிருந்தன. எவ்வாறாயினும், தொழிற்சாலையில் காணப்பட்ட அனைத்து சொத்துக்கள் தொடர்பாக அரசாங்கத்தின் மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தொழிற்பயிற்சி மற்றும் வணிக நடவடிக்கைக் அமைச்சின் செயலாளரின் 2018 பெப்ரவரி 27 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் 2017 பெப்ரவரி மாதம் நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக் குழுவினாலும் தொழிற்சாலையைக் கலைப்பதற்காக சொத்துக்களையும் பொறுப்புக்களையும் இனங்கண்டு அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை

விரைவாக எடுக்குமாறு பணிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த அறிக்கைத் திகதி வரை அதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ஊழியர்களை நீக்குவதற்கு முன்னர் ஹிங்குரானை வளவிலும் நாரஹேன்பிட தலைமை அலுவலகத்திலும் காணப்பட்ட அந்த ஊழியர்களின் பொறுப்பிலிருந்த சொத்துக்களை முறைப்படியாக பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் ஒப்படைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படாது ஊழியர்கள் நீக்கப்பட்டிருந்தனர்.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பலவீனங்கள் அவ்வவ்போது தொழிற்சாலையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்துக்களை உறுதியாக இனங்கண்டு அச்சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கும் பதிவேடுகளில் பதிவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (ஆ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கட்டுப்பாடு | பெற வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கும் செலுத்த வேண்டிய பணத்தை தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்காமை. |